**யட்டவத்த பிரதேச சபை - 2022**

-----------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

யட்டவத்த பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மற்றும் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு யட்டவத்த பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(I)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை- |
|---|---|---|---|
| (அ) | பிரதேச செயலகத்தில் இருந்து பெறவேண்டிய மற்றும் ஒப்பந்தக்காரர்களுக்கு செலுத்த வேண்டிய கைத்தொழில் பிடிகாசு ரூபா 138,510 மீளாய்வாண்டின் கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டில் நாட்குறிப்பு பதிவு மூலம் சீராக்குவதாக | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (ஆ) | மீளாய்வாண்டிற்கு கழிவுக் கட்டணங்கள் ரூபா 273,750 வருமானம், செலவினக் கணக்கில் ரூபா 255,330 ஆக ரூபா 18,420 எனக் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | - மேற்படி - |
| (இ) | மீளாய்வாண்டிற்குரிய கழிவுப்பொருள் கட்டணங்களுக்காக வழங்கப்பட்ட கழிவு மற்றும் மற்றும் பட்டியலிடப்பட்ட வருமானத்தில் பதிவழித்தல் முறையே ரூபா 11,220 மற்றும் ரூபா 7,200 வருமானச் செலவினக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை | - மேற்படி - | - மேற்படி - |

**1.7 இணக்கமின்மைகள்**
**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் | | | |
| (i) 122(1) ஆம் பிரிவு | பிரதேச சபை வீதிகள் தொடர்பான உப உறுப்புரை ஒன்றை பிறப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு எடுக்கவில்லை | உப உறுப்புரை வரைவாக்கப்பட்டு எதிர்வரும் நடவடிக்கை களுக்காக உள்ளூராட்சி மன்ற ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது | உப உறுப்புரைகளை பிறப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ii) 102(1) ஆம் பிரிவு மற்றும் கொலைகள கட்டளைச் சட்டத்தின் 4(1) ஆம் பிரிவு | அனுமதிப் பத்திரம் ஒன்றை பெற்றுக் கொள்ளாமல் மெதியகெலே பிரதேசத்தில் தனியார் இடமொன்றில் கொலைகளம் ஒன்று நடத்திச் செல்லப்படுவதாகவும் கொலைகளத்தில் மாட்டிறைச்சி விற்பனைக்காக வியாபார அனுமதி பத்திரம் ஒன்று வழங்கப்பட்டிருந்ததாகவும் அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் 1893 இன் 19 ஆம் இலக்க கொலைகள சட்டத்தின் 4(1) பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் அனுமதிப்பத்திரமன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 1946 இன் 57 ஆம் இலக்க மயானங்கள் மற்றும் தனியார் மயானங்கள் தொடர்பான கட்டளைச் சட்டம் 5(1) ஆம் பிரிவு | சபைக்கு சொந்தமாக காணப்படும் 43 மயானங்களின் உரித்தினை கையேற்று வர்த்தமானில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பொது மற்றும் தனியார் மயான கட்டளை சட்டத்தின் கீழ் பிரேதங்களை அடக்கம் செய்தல் மற்றும் ஈமக்கிரியைகளுக்காக ஒதுக்கப்பட்ட பிரதேசமாக வெளியிடப்படுவதற்காக குறித்த ஆவணங்களுடன் கௌரவ ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது | உரித்தை கையேற்று வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டும் |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2016 பெப்ரவரி 23 ஆம் திகதிய 1955/7 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1952 இன் 06 இம் இலக்க உள்ளூராட்சி மன்ற நிறுவனங்கள் (நிறைவேற்றப்பட்ட உப உறுப்புறை) சட்டம். | | | |
| (i) | கடுமையான மற்றும் அபாயகரமான வியாபாரங்கள் தொடர்பான உப உறுப்புரையின் 04 ஆம் பிரிவ | மீளாய்வாண்டின் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் பிரகாரம் 275 கடுமையான மற்றும் அபாயகரமான வியாபார நிறுவனங்களில் இருந்து சபைக்கு பெறவேண்டிய அனுமதிப்பத்திர வருமானம் ரூபா 202,250 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நடமாடும் சேவைகளை செயல்படுத்தி வியாபார அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உப உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ii) | முச்சக்கர வண்டிகளை நிறுத்திவைத்தல் தொடர்பான உப உறுப்புரையின் 4 (i) ஆம் பிரிவு | சபை அதிகாரப் பிரதேசத்தில் முச்சக்கர வண்டி நிறுத்தி வைப்பது தொடர்பான உப உறுப்புரையின் 4(1) பிரிவின் பிரகாரம் சபை பிரதேசத்தில் முச்சக்கர வண்டிகளை நிறுத்தி வைக்க வேண்டிய இடங்கள் மற்றும் ஒவ்வொரு இடத்திலும் நிறுத்தி வைக்கக்கூடிய ஆகக்கூடிய முச்சக்கர வண்டி எண்ணிக்கை பொதுச் சபை மூலம் தீர்மானிக்கப்பட்டு அது வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்டிருக்கவில்லை | வர்த்தமானி மூலம் வெளியிடுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக | உப உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 15,670,551 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 14,909,058 ஆக இருந்தது.

**2.2 வருமான நிர்வாகம்**

**2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 1,503,429 | 1,475,569 | 1,475,569 | - | 1,634,360 | 1,577,010 | 1,577,010 | - |
| (ii) | வாடகை | 1,219,554 | 1,048,506 | 1,048,506 | 31,000 | 997,125 | 619,214 | 619,214 | 31,000 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 687,030 | 677,750 | 652,030 | 9,000 | 695,860 | 644,860 | 645,860 | 16,000 |
| (iv) | ஏனைய வருமானம் | 19,851,957 | 24,680,834 | 26,221,123 | 13,871,393 | 17,204,461 | 20,093,805 | 20,673,576 | 14,194,774 |
| | | 23,261,970 | 27,882,659 | 29,397,228 | 13,911,393 | 20,531,806 | 22,934,889 | 23,515,660 | 14,241,774 |

**2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்**

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நீர்க் கட்டணங்கள்<br>நீர் மோட்டார் செயற்படாமை காரணமாக 2022 மே மாதம் பட்டியலிடல் நிறுத்தப்பட்டிருந்ததுடன் மெதியாபொல நீர் செயற்திட்டத்தின் நிலுவை நீர்க் கட்டணங்கள் ரூபா 118,480 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை | நிலுவை நீர் கட்டணங்களை அறவிடுவதற்காக நடமாடும் சேவைகளும் அறிவுறுத்தல் நிகழ்ச்சி திட்டங்களையும் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக | நிலுவை நீர் கட்டணங்களை அளவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| **(ஆ) நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணங்களும்**<br>மத்திய மாகாண பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 591,308 மற்றும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 11,999,077 ஆக இருந்தது. | எதிர்காலத்தில் அறுபடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணங்களும் அறவிடப்பட வேண்டும். |

### 2.3 மிகை அறவீடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக பொறுப்பு வாய்ந்த நபர்களுக்கு எதிராக என்னால் விதிக்கப்பட்ட மிகை அறவீடு 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா. 32,259 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | மிகை அறவீடு அறவிடப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தின் மூலம் விதிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுதல்

பிரதேச சபைச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | **பொதுச் சுகாதாரம்**<br>2020 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட நீர் மாதிரி பரிசோதனை பிரகாரம் 05 நீர் மூலாதாரங்களின் நீர் குடிப்பதற்கு பொருத்தமற்றது என குறிப்பிடப்பட்டிருக்கையில் சுத்திகரிக்கப்பட்டு மீண்டும் மாதிரி பரீட்சிப்பு மேற்கொள்ளாமல் குடிநீர் விநியோகிக்கப்பட்டிருந்தன | மூலப்பொருள் பற்றாக்குறை காணப்படுவதால் மூலப்பொருள் கிடைத்தவுடன் நீர் மாதிரி பரிசோதனையை மேற்கொள்வதாக | நீர் மாதிரி பரீட்சிக்கப்பட்டு சுத்தமான நீர் வழங்கப்பட வேண்டும் |
| (ஆ) | **எதிர்பார்த்த விளைவு மட்டத்தை அடையாமை**<br>1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 3 பிரிவின் பிரகாரம் அதிகார பிரதேசத்தில் சுடலைச்சாலை, பொது பலசலகூடம், வாரச்சந்தையொன்று மற்றும் பொது வியாபார சந்தை தொகுதி ஒன்று போன்ற பொது வசதிகளை வழங்காமை காரணமாக சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது. | குறைபாடுகளை எதிர்காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (இ) | **திண்மக்கழிவுப்பொருள் முகாமைத்துவம்**<br>சபை அதிகார பிரதேசத்தில் மாதாந்தம் 15 தொன் அளவில் கழிவுப் பொருள் சேகரிக்கப்படுவதுடன் | - மேற்படி - | சாத்தியவள ஆய்வு ஒன்று மேற்கொண்டு |

| | | |
|---|---|---|
| அதில் உக்கும் கழிவுகள்பொருட்கள், கழிவுப்பொருள் தொகுதியில் குழியொன்றுக்கு வெளியேற்றப்படு கின்றது. மீளாய்வாண்டின் மார்ச் 22 ஆம் திகதி 50 ச்வீதத பங்களிப்பு அடிப்படையில் ரூபா 1,048,896 பெறுமதியான துண்டுகளாக்கும் இயந்திரம் மற்றும் ரூபா 508,896 ஆன சளிக்கும் இயந்திரம் ஒன்றும் பிரதி விவசாய பணிப்பாளர் அலுவலகத்தில் இருந்து சேதன உர உற்பத்தி நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்டிருந்த போதும் துண்டாகப்பட்ட இயந்திரத்தின் இயலளவு போதுமானது அல்ல என குறிப்பிடப்பட்டு குறித்து இயந்திரம் பயன்படுத்தப்படாமல் வைக்கப்பட்டிருந்தது. | | இயலளவை இனங்கண்டு கொள்வனவு செய்யப்பட வேண்டும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | யட்டவத்த பிரதேச சபையின் நிரந்தர பதவியில் 52 பேருக்காக சம்பளம் தயாரிப்பதற்காக GPS கணபதி மென்பொருள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை | எதிர்காலத்தில் GPS கணனி மென்பொருள் மூலம் சம்பளம் தயாரிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சம்பளத்தை தயாரிப்பதற்காக சம்பளம் கணினி மென்பொருள் பயன்படுத்தப்பட வேண்டும் |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய 04 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 15,110,565 ஆக இருந்தது. | விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | பெறவேண்டிய பணத்தை அறவிட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு 1 ஆண்டிற்கும் 5 ஆண்டுகளுக்கம் இடைப்பட்ட கால வீச்சிலான நிர்மாணக் கடன்கொடுத்தோர் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 999,787 ஆக இருந்தது. | எதிர்காலத்தில் கொடுப்பனவு செய்ய நடவடிக்கை எடுப்பதாக | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2016 பெப்ரவரி 23 ஆம் திகதிய 1955/7 ஆம் இலக்க இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட உள்ளுராட்சி மன்ற நிறுவனங்கள் (நிறைவேற்றப்பட்ட உப உறுப்புறை) பிரதேச அதிகார பிரதேசத்தில் கட்டிடங்கள் நிர்மாணதற்கான திட்டங்களைப் பரீட்சித்தல் கட்டண அறவிடு | காணி அளவைப் பெற்றுக் கொள்வதற்கும் சபைக்கு அறவிட வேண்டிய பணத்தை விரைவில் அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுப்பதாக. | காணி அளவினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

தொடர்பான 12 ஆம் பிரிவின் பிரகாரம் கவுடுபபெளல்ல கலஹிட்டியா வளவ்வத்த காணியில் சமூக களியாட்ட நடவடிக்கைகளுக்காக 17.92 பேர்ச் ஆன காணித்துண்டொன்று மற்றும் ரத்லவெவ வத்துயாயவத்த காணியிலிருந்து (வென்ரொய் புரோபட்டி பிரைவேட் லிமிடட்) 37.56 பேர்ச் அளவிலான பகுதியொன்று கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சபையின் வெவ்வேறு செயல்பாடுகளுக்காக பயன்படுத்துகின்ற வழங்கப்பட்ட 6 ஏக்கர் 36.65 ஆன டங்கன் தோட்டக் காணியின் உறுதி அல்லது கையளிப்பு கட்டளையை பெற்றுக் கொள்ளப்படாதிருந்தத்துடன் ரூபா 3,750 ஆன 8 காணிப் துண்டுகளின் உரித்து கையேற்கப்பட்டிருக்கவில்லை. | கையேற்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எதிர்காலத்தில் எடுப்பதாக | காணிகளின் உரித்தினைக் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) சபையினால் முன்னைய ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட நிலையான சொத்துக்கள் கணிப்பீட்டின் பிரகாரம் சபைக்குரிய 29.1 பேர்ச் அளவிலான 3 காணித் துண்டுகள் வெளித்தரபினரால் கையேற்கப்பட்டிருந்த போதும் அக்காணித்துண்டுகள் தொடர்பாக எவ்வித நடவடிக்கையொன்றும் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | தீர்வுசெய்தல் மற்றம் அளவீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | அத்துமீறிய குடியிருப்பாளர்களை நீக்கி காணிகளின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும். |
| (இ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பௌதீக இருப்பு பரிசோதனையின் பிரகாரம் 05 நீர் உப பாகங்களின் கூட்டுத்தொகை ரூபாய் 23,118 ஆன குறைப்பயன்பாட்டில் காணப்பட்டது | பற்றாக்குறை தொடர்பாக பொறுப்பான தரப்பினரிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | பொறுப்பான தரப்பினரிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.4 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபாய் 295,917 ஆன கிரயமொன்றை மேற்கொண்டு நிர்மாணிக்கப்பட்டு இருந்த மேற்படி வீதிக்கு முறையாக வடிகான் முறைமையொன்று திட்டமிடப்படாமை மற்றும் மேற்பரப்பை முறையாக தயாரிப்பதற்கு மதிப்பீடு நிதி ஏற்பாடு மேற்கொள்ளாமையால் இவ்வீதி மழை நீருடன் கழுவிச் செல்லப்பட்டு காணப்பட்டது | வீதியின் கொங்கிரீட் தளத்தின் உள்ளே கழுவி பழுதுகள் ஏற்படாமல் தவிர்ப்பதற்காக நடவடிக்கை எடுத்துள்ளதாக | வீதியின் நிலையான தன்மைக்கு உரிய நிர்மாண மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.5 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றம் உள்ளவாறான பதவியணியுடன் ஒப்பிடும் போது 5 பதவிகளில் 5 ஊழியர் வெற்றிடங்கள் காணப்பட்டன. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் நிலைபேறான நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக 21 செலவின விடயங்களுக்காக ரூபா 4,250,085 ஆன ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் அதில் 7 செலவின விடயங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த மொத்தம் 67,205 ஆன நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டு இருந்ததுடன் 14 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 4,182,880 ஆன நிதி ஏற்பாடுகளில் ரூபா 3,518,739 ஆன 84 சதவீதம் சேமிக்கப்பட்டு நிலையான அபிவிருத்தி இலக்குகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | மதிப்பிடப்பட்ட அளவில் செலவினங்களை மேற்கொள்ள இயலுமை இல்லையென்தாக. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |